[2001 செப்டம்பர் 3

மாண்புமிகு பேரவைத் தலைவர்: என்ன திடீரென்று மதியத்திற்கு மேல் Point of Order?

திரு. சி. ஞானசேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்று மாலை 7 மானியக் கோரிக்கைகள் விவாதத்திற்கு எடுத்துக் கொள்ளப்படுகின்றன. நாம் சட்டமுன்வடிவுகளை இந்த அவையிலே நிறைவேற்றுவதைப்போல 7 மானியங்களையும் ஒரு குறுகிய காலத்திற்குள்ளாக இந்த இடத்திலே விவாதித்து முடிப்பது அவ்வளவு நல்லதாக அமையாது என்ற காரணத்தால் கொஞ்சம் அதிகமான நேரத்தை தாங்கள் இதிலே கொடுத்தால்தான் நன்றாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இல்லை. எல்லாவற்றுக்கும் அமைச்சர் ஒரே அமைச்சர்தான். அவர் பதில் சொல்லுவார். இது அலுவல் ஆய்வுக் குழுவில் ஏற்கெனவே பேசி முடிவு செய்யப்பட்டது. இனிமேல் மாற்ற முடியாது.

9. தகவல் கோரல்

காவிரி நதி நீர்ப் பங்கீடு கூட்டம்

திரு. ஜி.கே. மணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காவிரிப் பிரச்சினை மிக முக்கியமான பிரச்சினை. இது குறித்து ஆங்கிலப் பத்திரிகையிலே செய்தி வந்திருக்கிறது. தொலைபேசி மூலமாக பல்வேறு செய்திகள் வந்துகொண்டிருக்கின்றன.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. மணி, இது இரண்டு மாநிலங்களுக்கிடையே உள்ள பிரச்சினை. இது சம்பந்தமாக 6 ஆம் தேதி கூட்டம் நடைபெற இருப்பதாக அமைச்சர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். அது முடிந்தவுடன் எடுத்துக்கொள்ளப்படும்.

திரு. ப. ரங்கநாதன்: தலைவர் அவர்களே, நான்தான் முதலில் அறிவிப்புக் கொடுத்து இருந்தேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நிறைய உறுப்பினர்கள் அறிவிப்புக் கொடுத்திருக்கிறார்கள். (குறுக்கீடு) திரு. ரங்கநாதன், நீங்கள் கொடுத்திருக்கிறீர்கள். உட்காருங்கள்.

மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே இதுசம்பந்தமாக சட்டமன்ற உறுப்பினர் திரு. ரங்கநாதனிடமும், சட்டமன்ற உறுப்பினர் திரு, மணியிடமும்

தெளிவாகக் கூறியிருக்கிறேன். 6 ஆம் தேதி புது டெல்லியில் இதற்கான கூட்டம் நடைபெற இருக்கிறது. கூட்டம் முடிந்த பிறகு தக்க பதிலை தங்களுக்கு அளிக்கத் தயாராக இருக்கிறேன் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

THIRU C. GNANASEKARAN: Mr. Speaker Sir, Thiru S.M.Krishna is not ready to give water.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இடையில் 2, 3 நாட்கள்தான் இருக்கின்றன. (குறுக்கீடு) வேறு ஒன்றும் ஏற்பாடு செய்வதற்கு வழியில்லையே, 6 ஆம் தேதி கூட்டம் முடிந்த பிறகு எடுத்துக் கொள்ளலாம்.

திரு. ஜி.கே. மணி: பேரவைத் தலைவர் அவர்களே, இது ஒரு ஜீவாதாரப் பிரச்சினை. இந்த அவையில் சொல்ல வேண்டியிருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 6 ஆம் தேதி புது டெல்லியில் கூட்டம் நடைபெறவிருக்கிறது. அந்தக் கூட்டம் முடிந்த பிறகு அமைச்சர் அவர்கள் விளக்கம் சொல்லுவார்கள்.

திரு. சி. ஞானசேகரன்: பேரவைத் தலைவர் அவர்களே, இது குறித்து அரசு என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது? 6 ஆம் தேதி கூட்டம் நடைபெற இருப்பதாகச் சொல்லுகிறீர்கள். மேட்டூர் அணை வற்றிவிட்டதாகச் சொல்லியிருக்கிறீர்கள்.

திரு. ஜி.கே. மணி: பேரவைத் தலைவர் அவர்களே, கூட்டத்திற்கு தயாரிப்புகளுடன் செல்ல வேண்டும். அனைத்துக் கட்சிக் கூட்டத்தைக் கூட்டி பிரதமரைச் சந்தித்திருக்கலாம். திரு. எஸ்.எம். கிருஷ்ணாவைச் சந்தித்திருக்கலாம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: எல்லா தயாரிப்புகளுடன்தான் செல்வார்கள். (குறுக்கீடு) மணி, நாளைக்கு முதலமைச்சர் அவர்கள் வருகிறபோது பிரச்சினையைக் கேளுங்கள், முதலமைச்சர் அவர்கள் சொல்லுவார்கள்.

***மாண்புமிகு டாக்டர் மு. தம்பிதுரை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் மணி அவர்கள் ஒரு வேண்டுகோளை வைத்திருக்கிறார்கள். இதில் இந்த அரசு மிகவும் அக்கறை காட்டிக்கொண்டுதான் இருக்கிறது. நான்கூட ஒன்றாம் தேதி நடைபெற்ற National Development Council Meeting-ல் இந்தப் பிரச்சினை பற்றிப் பேசினேன். திரு. கிருஷ்ணா அவர்களும் இருந்தார்கள். பிரதமரும் இருந்தார். அவர்களிடம் வேண்டுகோள் வைத்திருக்கிறேன். இப்போது காவிரி ஆறு

பாய்கின்ற பகுதிகளிலே, தஞ்சை போன்ற பகுதிகளில் குறுவை சாகுபடி மிகவும் அல்லலுக்குள்ளாகி இருக்கிறது. ஆகவே பிரதமர் அவர்கள் தலையிட்டு திரு. கிருஷ்ணா அவர்களை வற்புறுத்தி எப்படியும் தண்ணீர் விட வேண்டுமென்று கேட்டுக்கொண்டேன். பிரதமரும் கவனிப்பதாகக் கூறியிருக்கிறார்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மணி, நீங்கள் கேட்டதற்கு கல்வி அமைச்சர் அவர்கள் விளக்கம் சொல்லிவிட்டார்கள். அதற்கு மேலும் தெரிவிக்க அரசிடம் பதில் இல்லையே. 6 ஆம் தேதி கூட்டத்திற்காக காத்திருக்கிறார்கள். கூட்டம் முடியட்டும், எடுத்துக்கொள்ளச் சொல்கிறேன்.

திரு. ஜி.கே. மணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே இரண்டு கூட்டத்திற்கு முதலமைச்சர் அவர்கள் போகவில்லை. போவதாக இருந்தால் வாழ்த்தி அனுப்புவோம். தமிழ்நாடு சட்டமன்றத்தின் சார்பாக வாழ்த்தி அனுப்புவோம். இது முக்கியமான பிரச்சினை. ஆங்கிலப் பத்திரிகையில் என்ன செய்தி வந்திருக்கிறது என்றால்...

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பிரச்சினைக்குள்ளே போக வேண்டாம். 6 ஆம் தேதி கூட்டம் நடைபெற இருக்கிறது. (குறுக்கீடு) யார் கலந்துகொள்ள இருக்கிறார்கள் என்ற விவரத்தை அமைச்சர் பிறகு சொல்லுவார்.

திரு. ஜி.கே. மணி: பேரவைத் தலைவர் அவர்களே, 6 ஆம் தேதிக்கு முன்னால், அனைத்துக் கட்சிக் கூட்டத்தைக் கூட்டி பிரதமரைப் பார்த்துவிட்டு, திரு. எஸ்.எம். கிருஷ்ணாவைப் பார்த்துவிட்டு ஆவன செய்யக் கோரலாம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இதுகுறித்து கல்வி அமைச்சர் விளக்கம் சொல்லியிருக்கிறார். திரு. கிருஷ்ணா இருக்கும்போதே அங்கே சொல்லியிருக்கிறார். (குறுக்கீடு) இதிலே அதற்கு மேல் போக முடியாது. அவ்வளவுதான்.

மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதுசம்பந்தமாக ஏற்கெனவே இரு மாநிலங்களில் இருந்தும் பொறியாளர்கள் ஒருவருக்கொருவர் மேட்டூர் அணையில் சந்தித்து அதற்கான அறிக்கையைத் தயாரித்து இப்போது அறிக்கை நிலுவையில் இருக்கிறது. 6 ஆம் தேதி இங்கே இருந்து தலைமைச் செயலாளரும், கர்நாடக தலைமைச் செயலாளரும், இருவரும் ஒன்றாகச் சந்தித்து 6 ஆம் தேதி ஒரு நல்ல முடிவு வரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. ஆகவே மணி அவர்கள், இரண்டு நாட்கள் பொறுத்துக்கொள்ள வேண்டுமென்று தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறேன்.

2001 செப்டம்பர் 3]

திரு. ஜி.கே. மணி: பேரவைத் தலைவர் அவர்களே, விளக்கம் சரியில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நீங்கள் சொன்னதற்கு விளக்கம் சொல்லிவிட்டார்கள். (குறுக்கீடு) முதலமைச்சர் அவர்கள் நாளை வரும்போது கேளுங்கள். ஏதாவது விளக்கம் சொல்ல வேண்டுமென்றால் சொல்லுவார்கள்.

திரு. ஜி.கே. மணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முக்கியமான பிரச்சினையில் வாய்ப்பு அளிக்காததால் பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பில் நாங்கள் வெளிநடப்புச் செய்கிறோம்.

(பாட்டாளி மக்கள் கட்சி உறுப்பினர்கள் அவையிலிருந்து வெளிநடப்புச் செய்தனர்.)

பிற்பகல் 4—35

6. மானியக் கோரிக்கைகள், 2001–2002, விவாதமும் வாக்கெடுப்பும்—தொடர்ச்சி

(ஆ) கோரிக்கை எண் 1 – நில வருவாய்த் துறை

(இ) கோரிக்கை எண் 2 – மாநில ஆயத் தீர்வைத் துறை

(ஈ) கோரிக்கை எண் 5 – முத்திரைத்தாள்கள் நிருவாகம்

(உ) கோரிக்கை எண் 6 – ஆவணப் பதிவு

(ஊ) கோரிக்கை எண் 40 – இயற்கைச் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு

(எ) கோரிக்கை எண் 43 – எழுதுபொருள் அச்சுத் துறை

(ஏ) கோரிக்கை எண் 45 – இழப்பீடுகளும் ஒதுக்கீடுகளும்

(ஆ) கோரிக்கை எண் 1 – நில வருவாய்த் துறை

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *2001–2002 ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கைகள்மீது விவாதமும் வாக்கெடுப்பும். மானியக் கோரிக்கை எண் 1 – நில வருவாய்த் துறை, மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர்.*